**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Sabitha | Prosecution | P.W-4, Cross |
| Husband Name | Bharathiraja | Defence | |
| Village | Mathakoil st, Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 41/2025 | | |

**Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the .provisions of Act X of 1873 of the day 22.09.2025**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**எதிரிகள் ஆஜரில்லை மனு செய்து அனுமதிக்கப்பட்டது.**

**மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தார் எனக்கு என்ன உறவு என்றால் என்னுடைய ஓப்புடையார். தேன்மொழி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு நாத்தனார் உறவு முறை. வாசகி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு மாமியார் உறவு முறை. தாமஷ் மற்றும் ஆசைதம்பி எனக்கு என்ன உறவு என்றால் ஊர்காரரர்கள். நான் தற்போது எந்த தெருவில் வசிக்கிறேன் என்றால் மாதாகோயில் தெருவில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவம் எங்கு நடைபெற்றது என்றால் மாதாகோவில் தெருவில் நடைபெற்றது. எனது வீட்டிற்கும் சம்பவம் நடந்த வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். கேள்விப்பட்டுதான் தெரியும். சம்பவம் நடந்தபோது நான் எனது வயலில் இருந்தேன். நான் எனது முதல் விசாரணையில் சம்பவம் நடந்தது எனது நாத்தனார் வீட்டு கொல்லையில் என்று சொல்லியுள்ளேன் என்றால் செல்லியுள்ளேன் என்றால் சரிதான் அவரது பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

சம்பவம் எப்போது நடந்தது என்றால் காலை 7.00 மணிக்கு சம்பவம் நடந்தது. நான் எப்போது வயலுக்கு சென்றேன் என்றால் காலை 6.00 மணிக்கு வயலுக்கு சென்றேன். சம்பவம் நடந்த இடத்திற்கும் எனது வயலுக்கும் எவ்வளவளவு தூரம் இருக்கும் என்றால் சுமார். 1 Km தூரம் இருக்கும். அவ்வளவு தூர்த்தில் நடந்த சண்டை எனக்கு கேட்டதா என்றால் எனக்கு சத்தம் கேட்டது. போலிசார் சம்பவத்தை பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தைபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Tamilvanan | Prosecution | P.W-5, Cross |
| Father Name | Balaiyan | Defence | |
| Village | Mathakoil st, Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 31/2025 | | |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 22.09.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜரில்லை மனு செய்து அனுமதிக்கப்பட்டது.

மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு அண்ணி ஆவார். சாட்சி தேன்மொழி எனக்கு என்ன உறவு என்றால் தங்கை ஆவார். சம்பவம் நடந்த இடத்திற்கு எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். போலிசார் என்னிடம் எந்த தேதி நேரத்தில் கையெழுத்து பெற்றார்கள் என்றால் 06.06.2021 மாலை 07.00 மணிக்கு கையெழுத்து பெற்றார்கள். போலிசார் 02.06.2021 இரவு 07.00 மணிக்கு பையெழுத்து பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. எந்த போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார் என்றால் SI கையெழுத்து பெற்றார். கையெழுத்தை என்வீட்டில்வைத்து வாங்கினார்களா என்றல் என் வீட்டு வாசலில் வாங்கினார்கள். போலிசார் எதற்காக கையெழுத்து பெற்றார்கள் என்றால் அந்த இடத்தின் வரைபடத்தினை வரைந்தார்கள். என்னிடம் போலிசார் வெற்று தாளில் கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை.

அந்த தாளில் எழுதியிருந்தது. அந்த தாளில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை.

போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.